உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக்
கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.06.2026 • மலர் 04 • இதழ்: 178 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 27.06.2026 • Vol : 04 • Issue : 178 • Page : 4 • Rs. 5/-

# மக்களோடு என்றும் களத்தில் நிற்பேன் மக்களின் நம்பிக்கையே எனது பலம்

## புதுடெல்லியில் ராகுல் காந்தி பேச்சு



புதுடெல்லி, ஜூன் 27

வீதிகளில் இருந்து நாடாளுமன்றம் வரை, மக்களின் நம்பிக்கையே தனது மிகப்பெரிய பலம் என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி மக்களவை எதிர்க்கட்சி தலைவராக பதவியேற்று இன்றோடு 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு ராகுல் காந்தி தனது 'எக்ஸ்' தள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

"நான் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று இன்றுடன் இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில், ஒவ்வொரு இந்தியனின் குரலையும் அதிகார மையங்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவே எனது அனைத்து நாட்களையும் அர்ப்பணித்தேன்.

நீட் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான போராட்டமாக இருந்தாலும் சரி, தேர்தல் மோசடிகளை அம்பலப்படுத்துவதாக இருந்தாலும் சரி, அல்லது அரசியலமைப்பை பாதுகாப்பதாக இருந்தாலும் சரி, நான் எல்லா களத்திலும் மக்களுடன் நின்றிருக்கிறேன், இன்றும் நிற்கிறேன், எப்போதும் மக்களோடு களத்தில் நிற்பேன்.

வீதிகளில் இருந்து நாடாளுமன்றம் வரை, மக்களின் நம்பிக்கையே எனது மிகப்பெரிய பலம். இந்த பயணம் நீண்டது, ஆனால் எனது உறுதிப்பாடு மாறவில்லை. மக்களுக்காக நான் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்பேன்."

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## இந்தியாவில் ரூ.4.53 லட்சம் கோடி முதலீடு செய்கிறது அமேசான்



புதுடெல்லி, ஜூன் 27

அமெரிக்காவைச்சேர்ந்த அமேசான், நடப்பாண்டு முதல் 2030 வரையிலான 4 ஆண்டுகளில் மொத்தம் 48 பில்லியன் டாலர் (சுமார் ரூ4.53 லட்சம் கோடி) முதலீடு செய்ய உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை, அமேசான் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (சிஇஓ) ஆண்டி ஜாசி நேற்று நேரில் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. பிரதமருடனான இந்தச் சந்திப்பின்போது, இந்தியாவுடனான அமேசானின் நீண்டகால உறவை ஆண்டி ஜாசி மீண்டும் உறுதிப்படுத்தினார். இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு மற்றும் கிளவுட் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக கூடுதலாக 13 பில்லியன் டாலர் முதலீடு செய்யப்படும் என ஜாசி தெரிவித்தார்.

இதன்மூலம், 20262030 காலகட்டத்தில் ஏஐ மற்றும் கிளவுட் துறையில் அமேசானின் ஒட்டுமொத்த முதலீடு 21 பில்லியன் டாலரைத் தாண்டும் (இது ஒட்டுமொத்த 48 பில்லியன் டாலர் முதலீட்டின் ஒரு பகுதியாகும்).

பிரதமரைச் சந்தித்த பின் ஆண்டி ஜாசி கூறுகையில், "ஒரு தசாப்தத்துக்கு முன்பு நாங்கள்

இந்தியாவில் கால் பதித்தோம். ஆன்லைன் வர்த்தகம், ஏஐ மற்றும் கிளவுட் துறைகளில் இந்திய மக்களின் ஆதரவு அபாரமானது. பிரதமர் மோடியின் 'வளர்ச்சியடைந்த இந்தியா' மற்றும் 'சுயசார்பு இந்தியா' ஆகிய தொலைநோக்கு பார்வைகளால் நாங்கள் ஈர்க்கப்பட்டுள்ளோம். இந்தியாவின் இந்த வளர்ச்சிப் பயணத்தில் அமேசான் என்றும் ஒரு நீண்டகால பங்காளியாகத் தொடரும்," என்றார்.



### துவாக்குடி மாதிரி பள்ளியில்

## மாணவர்களுக்கு போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, ஜூன் 27

திருச்சி மாவட்டம் திருவரம்பூர் கோட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரசு மாதிரி பள்ளியில் போதை எனக்கு வேண்டாம் நமக்கு வேண்டாம் என்ற முழக்கத்தை முன்வைத்து பள்ளி பருவத்தில் மாணவர்கள் போதைக்கு அடிமையாக வேண்டாம் என்பதை எடுத்துரைத்து போதைப் பொருட்கள் என்னென்ன

அதனை பயன்படுத்துவதனால் உடலுக்கு என்ன தீங்கு ஏற்படுகிறது சமுதாயத்தில் என்ன மாற்றம் நிகழ்கிறது வளரும் சமுதாயம் எப்படி சீரழிகிறது என்பதை பற்றி முழு விளக்கமாக எடுத்துரைத்து பள்ளி குழந்தைகள் போதை பொருளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்திதுவாக்குடி காவல் நிலைய உதவியாளர் நாகராஜ், மாதிரி பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மாதிரி பள்ளி சிறுவர் சிறுமிகருடன் போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமான பதாகையில் நின்று புகைப்படம் எடுக்கப்பட்டு விழிப்புணர்வு செய்யப்பட்டது.

## 'ஜனநாயகன் தயாரிப்பாளருக்கு முக்கிய பதவி வழங்கிய முதல்வர் விஜய்!' விவரம் என்ன?



சென்னை, ஜூன் 27

திரையுலகில் விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்' படத்தை தயாரித்திருந்தது கர்நாடகாவை சேர்ந்த கே.வி.என் நிறுவனம். படத்தை கடந்த பொங்கலுக்கு வெளியிட திட்டமிட்டிருந்தனர். ஆனால், படத்தின் தணிக்கையில் ஏற்பட்ட பிரச்னையால் அந்தப்படம் இன்னும் வெளியாகாமல் முடங்கி கிடக்கிறது.

ஜனநாயகன் படத்தின் தயாரிப்பாளரான கே.வெங்கட நாராயணாவுக்கு தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி பொறுப்பை கொடுத்திருக்கிறார் முதல்வர் விஜய்.

திரையுலகில் விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்' படத்தை தயாரித்திருந்தது கர்நாடகாவை சேர்ந்த கே.வி.என் நிறுவனம். படத்தை கடந்த பொங்கலுக்கு வெளியிட திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், படத்தின் தணிக்கையில் ஏற்பட்ட பிரச்னையால் அந்தப் படம் இன்னும் வெளியாகாமல் முடங்கி கிடக்கிறது. இடையில் சட்டமன்றத் தேர்தல் நடந்து விஜய் முதல்வரும் ஆகிவிட்டார். விஜய் ஆட்சியமைக்க உரிமைகோரி ஆளுநரை சந்தித்த போதும் கே.வி.என் நிறுவனத்தின் உரிமையாளர் கே.வெங்கட நாராயணா உடன் இருந்தார். இந்நிலையில், இன்று தமிழக அரசின் டெல்லி பிரதிநிதியாக கே.வெங்கட நாராயணா நியமிக்கப்பட்டிருப்பதாக தமிழகஅரசுஅதிகாரப்பூர்வமாகஅறிவித்திருக்கிறது.

தமிழக அரசின் அறிவிப்பு வெளியாகி சில நிமிடங்களே ஆகும் நிலையில், முதல் ஆளாக இந்த நியமனத்துக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## "தூய்மைப் பணிகளை வரும் காலங்களிலும் தனியாருக்கு விடக் கூடாது" பெ.சண்முகம்

சென்னை, ஜூன் 27

12மாநகராட்சிகளில்தூய்மைப்பணியை முழுமையாக தனியாருக்கு விடுவதற்கு ஆய்வு செய்வதற்காக தவெக அரசு வெளியிட்ட டெண்டர் ரத்து செய்யப்பட்டதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் வரவேற்றுள்ளார். மேலும், வரும் காலங்களிலும் எந்தப் பகுதியிலும் தூய்மைப் பணிகளை தனியாருக்கு விடக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், '12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணியை முழுமையாக தனியாருக்கு விடுவதற்கு ஆய்வு செய்வதற்காக தவெக அரசு டெண்டர் அறிவிப்பை கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வெளியிட்டிருந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட சில கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இது தவறான நடவடிக்கை, இதனை முழுமையாக கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன.

தற்போது அரசாங்கம் அந்த டெண்டரை ரத்து செய்ததாக அறிவித்திருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசாங்கத்தின் இந்த முடிவை வரவேற்கிறது. தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக தூய்மைப் பணியாளர்களை நிரந்தரமாக பணியமர்த்துவது தான் வழக்கமாக இருந்து வந்தது. இடையில் தான் தற்காலிகம், ஒப்பந்தம் என பணி பாதுகாப்பற்ற நிலையில் தொழிலாளர்கள் வைக்கப்பட்டு கடும் சுரண்டலுக்கும், பழிவாங்கலுக்கும் ஆளாகினர்.

எனவே, இந்த நிலைமைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வரும் காலங்களிலும் எந்த பகுதியிலும் தூய்மைப் பணிகளை தனியாருக்கு விடக் கூடாது எனவும், தற்போது ஒப்பந்த பணிகளில் உள்ள தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

### தென்தாமரைகுளத்தில்

## உலக போதை ஒழிப்பு தின ஜோதி ஓட்டம்



தென்தாமரைகுளம்.,ஜூன். 27

உலக போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று காலை குமரி சமூக விடியல் இயக்கம் சார்பில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஜோதி ஓட்டம் தென்தாமரைகுளம் பேரூராட்சி அலுவலகம் அருகில் இருந்து தொடங்கி நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு முடிவடைந்தது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக தென்தாமரை குளம் அரசு தொடக்கப்பள்ளி மாணவிகள் தமிழ் தாய் வாழ்த்து பாடினர், இயக்க செயலாளர் விஜயகங்காதரன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார், ஒருங்கிணைப்பாளர் மைக்கேல்ராஜ் வரவேற்று பேசினார்,குமரி சமூக விடியல் இயக்க தலைவர் ராமசாமி தலைமை உரையாற்றினார்,

தென்தாமரைகுளம் தூய பனிமய அன்னை ஆலய பங்கு தந்தை எட்வர்ட், இயற்கைஆர்வலர் சுதாமதி, டாக்டர் அரசு,இயக்க துணைச்செயலாளர் டாக்டர் டேனியல் தேவசுதன், சமூக ஆர்வலர் தர்மராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்,தென் தாமரைகுளம் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் பிரைட் பிளசிங் ஜோதி ஓட்டத்தை தொடங்கி வைத்தார், குமரி சமூக விடியல் இயக்க துணைதலைவர் முனைவர். ஜெயச்சந்திரன்நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியில் இயக்கத்தின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள். மக்கள் பிரதிநிதிகள்,பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தென்தாமரை குளம் அருகே

## இளம் பெண்ணுக்கு கொலை மிரட்டல்; ஒருவர் கைது

கன்னியாகுமரி,ஜூன். 27

கன்னியாகுமரி அடுத்த தென்தாமரை குளம் அருகே நாடான்ஊற்று என்ற பகுதியை சேர்ந்தவர் விபின். இவர் சென்னையில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி ஷகீலா (28). ஷகிலா தற்போது தனது மாமியார் புஷ்பம் என்பவருடன் வசித்து வருகிறார். அதே பகுதியை சேர்ந்த விஜயகுமார் (57) என்ற கூலித் தொழிலாளியுடன் ஷகிலாவிற்கு முன் விரோதம் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவ தினம் ஷகிலா அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த விஜயகுமார் முன்விரோதத்தை மனதில் வைத்து ஷகிலாவை தகாத வார்த்தைகளால் திட்டியதுடன் கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளார்.

இது குறித்து ஷகிலா தென்தாமரைகுளம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் இளம்பெண்ணை திட்டி, கொலை மிரட்டல் விடுத்த விஜயகுமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை அமைச்சர் மதன் ராஜா கொடியசைத்து தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி, ஜூன் 27

தூத்துக்குடியில் "ஸ்டார்ட் ரன், ஸ்டாப் டிரக்ஸ்" விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை அமைச்சர் மதன் ராஜா கொடியசை த்துத் தொடங்கி வைத்தார்.தமிழ்நாட்டைப்போதை இல்லாத மாநிலமாக மாற்றுவதை வலியுறுத்தி, தூத்துக்குடியில் மாணவ, மாணவிகள் பங்கேற்ற "ஸ்டார்ட் ரன், ஸ்டாப் டிரக்ஸ்" விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தைக் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன் ராஜா, மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

தூத்துக்குடி மாவட்ட விளையாட்ட ரங்கில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. "தமிழ்நாட்டைப் போதை இல்லாத மாநிலமாக மாற்ற நாம் ஒன்றிணைவோம்" என்ற முக்கியக் கருப்பொருளை மையமாகக் கொண்டு இப்போட்டி ஒருங்கிணைக்கப்பட்டது. மாபெரும் போட்டியில் ஏராளமான மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஓடினர்.

இந்நிகழ்வின் போது தூத்துக்குடி மாநக ராட்சி ஆணையர் சிப்ரியங்கா, மாவட்ட வருவாய் அலுவலர் குருச்சந்திரன் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் முக்கியப் பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



# காப்புக்காட்டில் நூல் வெளியீட்டு விழா குமரி முத்தமிழ் மன்றம் சார்பில் நடந்தது

புதுக்கடை, ஜூன்.27

குமரி முத்தமிழ் மன்றம் சார்பில் காப்புக்காட்டில் நூல் வெளியீட்டு விழாதலைவர்லாசர்தலைமையில் நடந்தது. அனிதா றசல் வரவேற்றார். ஆலங்கோடு பகுதியை சேர்ந்த பள்ளி காவலர் மணி எழுதிய விவசாயி என்னும் நூலை ஞானதீபம் கல்லூரி தாளாளர் தாமஸ் ராஜ் வெளியிட தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் சிந்து குமார் பெற்றுக் கொண்டார். கவிஞர் ஞானாமிர்தம் கவி பாடினார். பணி நிறைவு பெற்ற ஆசிரியர் சூசைமிக்கேல், மார்த்தாண்டம்வித்யாஜோதிமெட்ரிக்மேல்நிலைப்பள்ளிதாளாளர்லாசர், பாரதிய படை வீரசங்கத்தலைவர் எலிசா ,அவைத் தலைவர் குமரேசதாஸ், பொருளாளர் தமிழ்மாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இணைச் செயலர் பாபு நன்றி கூறினார். துணைத் தலைவர் வின்சென்ட், பிலிப்போஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி மாவட்டத்தில்

# குழந்தை திருமணங்களை தடுத்த அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்: ஆட்சியர் அறிவுறுத்தல்



தருமபுரி ஜூன் 27

தருமபுரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள குறிஞ்சி கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண் கபிலன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டு துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டக்குழு குறித்து விளக்கி பேசினார்கள். கூட்டத்தில் ஆட்சியர்கூறியதாவது. தமிழ்நாடு அரசு குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் அவர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. தருமபுரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின்மூலம் செயல்படும் அன்பு கரங்கள் திட்டத்தில் பள்ளி கல்வித்துறையின் வழியாக பள்ளி தலைமை ஆசிரியர் மூலம் பள்ளியில் உள்ள தகுதியான குழந்தைகளை கண்டறிந்து திட்டத்தில் சேர்த்திட வேண்டும். மேலும் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் சேர்க்கை செய்திட வேண்டும். மாவட்டத்தில் குழந்தை திருமணங்கள் நடைபெறாமல் தடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும். பாலியல் வன்கொடுமை நடைபெறும் இடங்களில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திட வேண்டும் இவ்வாறு ஆட்சியர் கூறினார். இந்தக் கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் விஜயா, மாவட்ட சுகாதார அலுவலர் ராஜேந்திரன், குழந்தைகள் நலக்குழு தலைவர் உமா மகேஸ்வரி, இளைஞர் நிதி குழுமம்உறுப்பினர்கலைவாணி, மாவட்ட நன்னடத்தை அலுவலர் சவுதாமணி, சமூக நலத்துறை அலுவலர் பவித்ரா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## குமரியில்

# உலக போதைப்பொருள் எதிர்ப்பு தின மாரத்தான் அமைச்சர் செ.ராஜேஷ் குமார் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூன்.27

கன்னியாகுமரி மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறையின் சார்பில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி அண்ணா விளையாட்டு அரங்கில் எலக போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தி னையொட்டிவீரர்வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட மாரத்தான் போட்டி நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் வீரர் வீரங்கனைகளுடன் 5 கிலோ மீட்டர் தூர மாரத்தான் ஓட்டத்தினை ஓடி துவக்கி வைத்தார். தொடர்ந்து அவர் கூறுகையில்:

'போதை இல்லாத தமிழ்நாடு' என்ற இலக்கை அடைய ஒட்டுமொத்த சமுதாயமும், குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள் கைகோர்க்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஜூன் 26ம் தேதி உலகப்போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு எதிரான தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் கலந்துகொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். என கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் த தலைமையில் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியினை ஏற்றுகொண்டதோடு, ஓட்டத்தை ஆரம்பி போதையை நிறுத்து என்ற தலைப்பில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை அமைச்சர் துவக்கி வைத்தார். மேலும் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் ஆகியோர் செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இம்மரத்தான் ஓட்டமானது அண்ணா விளையாட்டு அரங்கில் துவக்கி, மணிமேடை, வேப்பமூடு, மாவட்ட நீதிமன்ற சாலை, பெண்கள் கிறிஸ்தவக்கல்லூரி, வசந்தம் மருத்துவமனை வழியாக அண்ணா விளையாட்டு அரங்கில் முடிவடைந்தது.

நடைபெற்ற நிகழ்வுகளில் பள்ளிகல்வி துறை இயக்குநர் கண்ணப்பன், மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள், விளையாட்டு அலுவலர்கள், வீரர், வீராங்கனைகள், பொதுமக்கள், இளைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## குமரியில்

# சித்தியுடன் முறை தவறிய கள்ளக்காதல் சித்தப்பா மண்டையை உடைத்த வாலிபர்

மார்த்தாண்டம், ஜூன். 27

குமரி மாவட்டம் பளுகல் பகுதியை சேர்ந்த 37 வயது கூலி தொழிலாளிக்கு 31 வயதில் மனைவி உள்ளார். அந்தப் பெண் திருவனந்தபுரத்தில் ஒரு கால் சென்ட்ரில் வேலை செய்து வருகிறார். அதே பகுதியில் தொழிலாளியின் அண்ணன் மகனான 27 வாலிபரும் வசித்து வருகிறார். இந்த நிலையில் இந்த நிலையில் கூலி தொழிலாளியின் மனைவிக்கும் அந்த வாலிபருக்கும் கள்ள தொடர்பு ஏற்பட்டுள்ளது. சித்தி உறவுமுறை என்பதால் உறவினர்கள் அவர்கள் நடவடிக்கையில் முதலில் சந்தேகம் கொள்ளவில்லை. இதனை பயன்படுத்தி இருவரும் அடிக்கடி உல்லாசமாக இருந்துள்ளார்கள். இதற்கிடையே ஒரு கட்டத்தில் வாலிபருக்கு இனிமேல் சித்திதான் வேண்டுமென முடிவெடுத்து உள்ளார். இதன் காரணமாக சித்தி தனது கணவருடன் வெளியில் சென்று வருவது வாலிபருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. எனவே கணவருடன் செல்லக்கூடாது எனவும், தன்னுடன்தான் பேசவேண்டும் எனவும் சித்தியை வாலிபர் கட்டாயப்படுத்தி உள்ளார். இதனால் அதிர்ந்து போன சித்தி என்ன செய்வதென்று தெரியாமல் இருந்துள்ளார். இதை தொடர்ந்து சித்தி வாலிபருடன் பேசுவதை நிறுத்திவிட்டு அவரை புறக்கணித்து வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வாலிபர் சம்பவத்தன்று இரவு சித்தப்பாவிடம் தகராறு செய்து மறைத்து வைத்திருந்த சுத்தியலால் அவரது தலையில் ஓங்கி அடித்துள்ளார். இதில் மண்டை உடைந்து அவர் படுகாயமடைந்தார். அக்கம்பக்கத்தினர் ஓடி வரவே வாலிபர் அங்கிருந்து தப்பி சென்று விட்டார். உடனடியாக அவர் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். இது குறித்து பளுகல் போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த வாலிபரை தேடி வந்தனர். இதற்கிடையில் சித்தப்பாவும் தன்னை தாக்கியதாகவும், அதனால் காயம் ஏற்பட்டதாக அந்த வாலிபரும் குழித்துறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். போலீசார் இரு தரப்பினரிடமும் விசாரித்து வருகின்றனர்.

# தாய் இறந்த மனவேதனையில் மாணவி தூக்கிட்டு தற்கொலை

மார்த்தாண்டம், ஜூன். 27

திருவட்டாறு அருகே உள்ள செங்கோடி பகுதியை சேர்ந்தவர்ரிங்கிள்ஜெயக்குமார். கூலித்தொழிலாளி. இவரது மனைவி நிர்மலா சுனிதா. இவர்களுக்கு 15 வயதான ரினோஷியா என்ற மகளும், ஒரு மகனும் உள்ளனர். ரினோஷியா அந்தப் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 10ம் வகுப்பு படிப்பு வந்தார். இதற்கிடையில் நிர்மலா சுனிதா கடந்த 3ஆண்டுகளுக்கு முன்பு உடல் நலக்குறைவால்திடீரென இறந்துவிட்டார். அவரது மறைவுக்கு பிறகு ரிங்கில் ஜெயக்குமார் தனது இரண்டு குழந்தைகள் உடன் அதே வீட்டில் வசித்து வந்தார். தாயின் இறப்பு மகள் ரினோஷியாவை மிகுந்த மனவேதனை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. தாயை மறக்க முடியாமல் தவித்த அவர் தாங்கள் வசித்து வரும் வீட்டை விட்டு வேறு இடத்தில் செல்ல வேண்டும் என்று தந்தை இடம் அடிக்கடி வற்புறுத்திவந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த நிலையில் ரிங்கிள் ஜெயக்குமார் நேற்று முன்தினம் வேலைக்கு வெளியில் சென்று விட்டார். பள்ளிக்கு சென்றிருந்த மாணவிரினோஷியாமாலையில்வீட்டிற்கு திரும்பி வந்தார். தந்தை வெளியே சென்றிருந்ததால் வீட்டில் பின் வாசல் பகுதியில் உள்ள கொக்கியில் தூக்கிட்டு மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

மாலையில் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வந்த தந்தை ஜெயக்குமார் மகள் தூக்கில் தொங்குவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றார். அங்குபரிசோதித்தடாக்டர்கள்ரினோஷியா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து ஜெயக்குமார் திருவட்டாறு போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து மாணவி தாயின் மறைவால் ஏற்பட்ட பாதிப்பால் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரி மாவட்ட விளையாட்டரங்க வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்தருமபுரிமாவட்டபிரிவுசார்பாக"ஸ்டார்ட்RUNஸ்டாப்DRUGSபோதைப்பொருள் ஒழிப்பு ஓட்டம் 2026" தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் சரவணன் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தனர். இதை தொடர்ந்து போதை பொருள் ஒழிப்பு குறித்த கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தும், விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இதில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சிவரஞ்சன் ,செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் விஜயா, உதவி ஆணையர் ( கலால்) கோபு மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தருமபுரி அருகே

# அக்காள் தம்பி படுகொலை 5 நபர்களை பிடித்து காவல்துறையினர் விசாரணை

தருமபுரி ஜூன் 27

தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை அருகே உள்ள ஏ. ஜெட்டி அள்ளி தகடூர் நகர் பகுதி சேர்ந்தவர் நஞ்சம்மாள் (வயது 45) இவர் கணவரை பிரிந்து வாழ்ந்து வந்தார். இவருடைய தம்பி மாதேஷ்( வயது 43) லாரி டிரைவர் இவர் நஞ்சம்மாள் வீட்டருகே வசித்து வந்தார். இந்த நிலையில் வீட்டின் வெளிப்பகுதியில் அவர் மற்றும் மாதேஷ் ஆகியோர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கொலை செய்யப்பட்டுகிடந்தனர். இதை பார்த்த அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதைக் குறித்து உடனடியாக அதியமான் கோட்டை காவல்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன் பெயரில் காவல் துறை கண்காணிப்பாளர் சிவராமன், இன்ஸ்பெக்டர்சிரஞ்சீவிகுமார்மற்றும்காவல் துறையினர் அங்கு விரைந்து சென்றனர். பின்னர் கொலையுண்ட நஞ்சம்மாள், மாதேஷ் ஆகியோரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் சம்பவம் நடந்த வீட்டிற்கு கைரேகை நிபுணர்கள் அங்கு பதிவான தடயங்களை சேகரித்தனர். மோப்பநாய் அழகன் வரவழைக்கப்பட்டது அது மோப்பம் பிடித்தபடி சிறிது தூரம் ஓடிச்சென்றது ஆனால் யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. சொத்து பிரச்சினையால் இந்த இரட்டை கொலைநடந்ததா? அல்லதுநகைபறிக்கும்நோக்கத்துடன் மர்ம நபர்கள் அக்காள் தம்பியை கொலை செய்தார்களா? என பல்வேறு கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே சந்தேகத்தின் பேரில் மூன்று பெண்கள் உட்பட ஐந்து நபர்களை பிடித்து அதியமான் கோட்டை காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விளாத்திகுளத்தில் அமைந்துள்ள

# யோகிராம் சூரத்குமார் நாமகேந்திரத்தில் முதலாவது ஆண்டு வருஷாபிஷேக விழா



விளாத்திகுளம் ஜூன் 27.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் குளத்தூர் சாலை அமைந்துள்ள யோகிராம் சூரத்குமார் நாம கேந்திரத்தில் முதலாம் ஆண்டு வருஷாபிஷேக நன்னீராட்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. யோகிராம் சூரத்குமாருக்கு பல்வேறு சிறப்பு பூஜை, அபிஷேகங்கள் தீபாதாரணை நடைபெற்றது, பல்வேறு வண்ண மலர்களால் மாலை அணிவித்து, வருஷாபிஷேக விழாவிற்கு வந்திருந்த பக்தர்கள் யோகிராம் சூரத்குமாரின் நாமங்களை பாடி வழிபாடு நடத்தினர்,அதனைத்தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் சுவாதி திருவிளக்கு பூஜை நடைபெற்றது, பின்னர் பிற்பகல் 1 மணி அளவில் மகா ஆரத்தி சிறப்பு பூஜை நடைபெற்றது. விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து கோவிலில் நடைபெற்ற சிறப்பு அன்னதானத்தில் கலந்து கொண்டு உணவு அருந்தி சென்றனர்.

## திருவட்டாறு அருகே

# பா . ஜ அண்ணாமலை இயக்கத்தினர் மோதல்; போலீசார் வழக்கு பதிவு

மார்த்தாண்டம்,ஜூன். 27

திருவட்டாறு அருகே உள்ள செங்கோடி பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித் (38). நாகர்கோவில் அருகே உள்ள ஒரு கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் பாரதிய ஜனதா கட்சியில் இருந்தார். தற்போது அந்த கட்சியில் இருந்து விலகி பாரதிய ஜனதா முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தொடங்கியுள்ள வீ த லீடர்ஸ் இயக்கத்தில் இணைந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இவர் பூவன்கோடு சந்திப்பு பகுதியில் நிற்கும் போது பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த கண்ணன், வெங்கட், சுரேஷ் மற்றும் கண்டால் தெரியும் ஒருவர் என 4 பேர் வந்து தகராறு செய்து அவரை தாக்கி, வி தி லீடர்ஸ் இயக்கத்தில் பணியாற்ற விட மாட்டோம் எனக்கூறி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் படுகாயம் அடைந்த ரஞ்சித் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து திருவட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து கண்ணன் உட்பட நான்கு பேர் மீது விசாரித்து வருகின்றனர்.

இது போன்று பாரதிய பாஜக கட்சியை சேர்ந்த திருவிதாங்கோடு பகுதியை சேர்ந்த வெங்கட்ராமன் என்பவர் திருவட்டாறு காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்துள்ளார். அந்த புகாரில் பாரதிய ஜனதா கட்சியின் பொறுப்புகளுக்கு எதிராக அவதூறுகள் பரப்பி வந்ததை கண்டித்ததால் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரஞ்சித் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவ தினம் பைக்கில் செல்லும்போது கீழே தள்ளி வலது கால் முட்டில் மிதித்து காயம் ஏற்படுத்தியதாகவும் புகாரில் கூறியுள்ளார்.

படுகாயம் அடைந்த வெங்கட்ராமன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த புகாரின் பேரில் ரஞ்சித் மற்றும் கண்டால் தெரியும் ஒருவர் என இரண்டு பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அண்ணாமலை இயக்கத்தினர், பாரதிய ஜனதாவினர் இடையே ஏற்பட்டுள்ள இந்த பிரச்சனை பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

## மார்த்தாண்டம் அருகே

# பைனான்ஸ் ஊழியர் தாக்கி கொலை மிரட்டல்; 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன். 27

மார்த்தாண்டம் அருகே பெரியவிளை பகுதியை சேர்ந்தவர் வினேஷ் (27). பைனான்ஸ் ஊழியர். சம்பவத்தன்று அவரது நண்பரான ராபின்சன் (27) என்பவருடன் சேர்ந்து உறவினர் வீட்டிற்கு பைக்கில் சென்றுள்ளார். அப்போது கல்லுக்கூட்டம் சந்திப்பு பகுதியில் சென்ற போது அதே பகுதியை சேர்ந்த கூலித் தொழில் செய்து வரும் காட்வின் (30) என்பவர் ஓட்டி வந்த பைக்கில் வினேஷ் ஓட்டிய பைக் நேருக்கு நேர் மோதியது. இது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் வினேஷ் மற்றும் ராபினை, காட்வின் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் 3 பேர் சேர்ந்து கம்பியால் தாக்கி விட்டு தப்பியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த இரண்டு பேரையும் மீட்டு அக்கம் பக்கத்தினர் குழித்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து வினேஷ் மார்த்தாண்டன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் காட்வின் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## குமரியில்

# 34 இடங்களில் போதை விழிப்புணர்வு ஜோதி ஓட்டம்: கலெக்டர் துவக்கினார்



நாகர்கோவில், ஜூன்.27

கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நலம் சிறப்பு செயலாக்கத்துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுசார்பில்உலகபோதை பொருட்கள் மற்றும் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு தின விழிப்புணர்வு ஜோதி ஓட்டத்தினை பெற்றுக்கொள்ளும்நிகழ்ச்சி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா விளையாட்டுஅரங்கில் நடைபெற்றது.

ஆட்சித்தலைவர் மு.பிரதாப் விழிப்புணர்வு ஜோதி ஓட்டத்தினை துவக்கி வைத்து கூறியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி பள்ளிக்கல்லூரி மாணவ மாணவியர்களிடையே போதைப் பழக்கத்தினை வேரோடு ஒழித்திடும் வகையில் "போதையில்லா தமிழ்நாடு" என்ற தலைப்பில் அரசு மற்றும் தன்னார்வலர்களுடன் இணைந்து பல்வேறு வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுவருகிறது. குமரியில்கன்னியாகுமரி, களியக்காவிளை, மார்த்தாண்டம், கல்லுவிளை, முளகுமூடு, தக்கலை, வில்லுகுறி, சுங்கான்கடை, மேல்பாலை, குலசேகரம், அருமனை, சித்திரங்கோடு, கருங்கல். வெள்ளியா விளை, திங்கள்நகர், பள்ளம், அம்மாண்டி விளை, முட்டம், கடியப்பட்டணம், குளச்சல், கோடிமுனை, குறும்பனை, ஆலஞ்சி, இனையம், ஆரல்வாய்மொழி, அழகப்பபுரம், பெருந்தலைகாடு, தென்தாமரைகுளம், தேரேக்கால்புதூர், வெட்டூர்ணிமடம். ஆசாரிபள்ளம், குருசடி, இராமன்புதூர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட 34 இடங்களிலிருந்து பல்வேறுபட்ட அரசு மற்றும் காவல்துறை அலுவலர்களால் ஜோதி ஓட்டம் துவக்கி வைக்கப்பட்டு,

வடசேரி அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்திற்கு வந்தடைந்து. இவ்வோட்டத்தில் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள், போதை பழக்கத்தில் இருந்து மீண்டவர்கள் என பல தரப்பினர்கள் இவ்வோட்டத்தில் கலந்துக்கொண்டனர். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவரால் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த குறும்படம், விழிப்புணர்வு ஒட்டுவில்லை வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சகிலா பானு, உதவி ஆணையர் கலால் ஈஸ்வரநாதன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர் ராஜன், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# போதை பொருள் ஒழிப்பு கையெழுத்து மற்றும் உறுதிமொழி ஏற்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




மதுரை ஜூன் 27

சர்வதேச போதை பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு மதுரையில் தமிழக வெற்றிக்கழகம் மற்றும் ஐங்கரன் ஃபைட் சென்டர் சார்பில் சிறப்பு விழிப்புணர்வு மற்றும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. போதை கலாச்சாரத்திற்கு அடிமையாகி உள்ள இளைஞர்களை மீட்டு நல்வழிப்படுத்துவதே நிகழ்வின் முக்கிய நோக்கமாக கருதப்பட்டது.

போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இன் நிகழ்வில் கடந்த 19 ஆண்டுகளாக போதை மீட்பு மற்றும் மனநல சேவையில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஐங்கரன் பவுண்டேஷன் சேவையை பாராட்டி அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

சென்னையில் முதல்வர் இந்த தினத்தை முன்னிட்டு பிரம்மாண்ட மாரத்தான் போட்டியை தொடங்கி வைத்துள்ளதை ஒட்டி அதே போல தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் மாவட்ட தலைநகரங்களிலும் இந்த போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தமிழக வெற்றிக் கழகம் மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ் கார்த்திகேயன் தலைமையேற்றார். மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பொன் ராஜா, குமார், அரவிந்த்,வெங்கடேசன் மலையரசன், சிலம்பு மேலும் மதுரை மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். " போதை பொருள் இல்லா புதிய தமிழகத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி ஏற்போம் " என்று விழாவை கலந்து கொண்ட தவெக பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்

## கார்த்திகேயா வாஜ்பாய் எழுதிய "தி அன் பிகம்மிங்" நூல் வெளியீட்டு விழா




சென்னை ஜூன்27

எழுத்தாளரும் வழக்கறிஞருமான கார்த்திகேயா வாஜ்பாய், தனது புதிய நூலான தி அன் பிகம்மிங்' நூலை சென்னை அண்ணா சாலையில் உள்ள ஹிக்கின் போதம்ஸ் புத்தக நிலையத்தில் வெளியிட்டார்.

நூல் வெளியீட்டு நிகழ்வில் எழுத்தாளரும் தலைமைத்துவ ஆலோசகருமான ஸ்ரீபிரகாஷ் நடாதூர் ஸ்ரீதரன் கலந்து கொண்டு, வாழ்க்கை நோக்கம், அடையாளம் மற்றும் தனிமனித வளர்ச்சி குறித்து கார்த்திகேயா வாஜ்பாயுடன் உரையாடினார். ஆன்மிகப் பயிற்சிகள் குறித்து பேசுகையில், தியானம் என்பது எண்ணங்களை முற்றிலும் நீக்குவது அல்ல; மாறாக விழிப்புணர்வை வளர்ப்பதற்கான ஒரு பயிற்சி என வாஜ்பாய் விளக்கினார். இதுகுறித்து ஸ்ரீபிரகாஷ் கூறுகையில், “இந்த நூல் வெற்றி மற்றும் அடையாளம் குறித்த நம்முடைய ஆழமான நம்பிக்கைகளை மறுபரிசீலனை செய்ய அழைக்கிறது. உடனடி பலன் தெரியாவிட்டாலும், தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆன்மிகப் பயிற்சியே உண்மையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது,” என்றார்.

நூல் வெளியீட்டு விழாவில் கார்த்திகேயா வாஜ்பாய்பேசுகையில், “வெளிப்புறஉலகம்நிர்ணயிக்கும் இலக்குகளைத் தொடர்ந்துதுரத்துவதற்குப் பதிலாக, உள்ளார்ந்த சிந்தனையின் மூலம் வாழ்க்கை தனது நோக்கத்தை வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம். ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள இந்நூல் தமிழ் உள்பட இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் என்று தெரிவித்தார். இதற்கு முன்பு, அவர் எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ராமாபுரம் வளாகமாணவர்களுடன்கலந்துரையாடினார். அங்கு ராமாபுரம் மற்றும் திருச்சி வளாகங்களின் தலைவர் டாக்டர் ஆர். சிவகுமாரை சந்தித்து, தனது நூலின் பிரதியை வழங்கினார்.



வேலூர் மாவட்டம் வேலூர் மாநகராட்சி விருப்பாட்சிபுரம்பேருந்துபயணியர் நிழற்குடம்அருகில் புதிய ஸ்ரீ.முருகன்.டீ ஸ்டால் மற்றும் டிபன் சென்டர்திறப்பு விழா மிக கோலகாலமாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.மு.வினோத் கண்ணன் கலந்து கொண்டு புதியகடை யை திறந்து வைத்தார்இதில் த.வெ.ககட்சியின் இணை செயலாளர். சீனிவாசன்.எஸ் நவீன். உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு அழைப்பாளர்களுக்குகடைஉரிமையாளர்குடும்பத்தினர்சால்வைஅணிவித்துமரியாதை செலுத்திவரவேற்றனர்.மேலும் கடை திறப்பு விழா முன்னிட்டு ரூபாய் 200 க்கு மேல்.டீ மற்றும் டிபன் வாங்கும்சுமார் 50 நபர்களுக்குவெள்ளி நாணயம் குலுக்கள் முறையில்வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

# திருப்பத்தூரில் அரசு, தனியார் பள்ளிகளில் அதிகளவில் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

### அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளையின் மாநில தலைவர் வழங்கினார்



திருப்பத்தூர் ஜூன் 27:

திருப்பத்தூரில் அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளை சார்பில் மாவட்ட அளவில் அரசு,தனியார் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு மற்றும் உயர்கல்வி படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும், ஆதரவற்ற உடல் நிலை பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சியானது,

திருப்பத்தூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்தாய் வாழ்த்து பாடலுடன் துவங்கிய நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்டத் தலைவர் சேட்டு வரவேற்புரை ஆற்றினார். மாநிலத் துணைச் செயலாளர் சேகர், மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் கடந்தாண்டு 12 மற்றும் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா ஐந்து ஆயிரம், நான்கு ஆயிரம், மூன்று ஆயிரம், ஊக்க தொகையாகவும், கல்லூரில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை மற்றும் கேடயமும், ஆதரவற்ற மற்றும் உடல் நலன் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, உணவுப்பொருள்கள் போன்றவற்றை மாநில தலைவர் அப்பாதுரை வழங்கினார். பின்னர் பொதுமக்கள் இடையே உரையாற்றும் போது கல்வி அனைவரது வாழ்க்கையும் முன்னேற்றுவதாகவும் மாணவ, மாணவிகள் தங்களது பெற்றோர்களின் கஷ்டத்தை உணர்ந்து பொறுப்புணர்வுடன் படித்து அடுத்த முறை இன்னும் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற வேண்டும் என வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட துணைத் தலைவர் இளவரசி நன்றி கூறினார். இறுதியில் மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளும், அறுசுவை உணவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம், மாநிலச் செயலாளர் ஆனந்தி அப்பாதுரை, மாநிலத் துணைச் செயலாளர் சேகர், மாநில பொருளாளர் தேவராஜ், மாநில ஒருங்கிணைப்பாளர் மனோகரன், மற்றும் கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள், உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.




கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், ஜூன் 26 சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பாக, போதைப் பொருட்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.சி.அனிதா ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் உதவி ஆணையர்.ஆயம் .மு.பழனி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் .செந்தில்குமார், துணை காவல் கண்காணிப்பாளர் . ராமசந்திரன், துணை காவல் கண்காணிப்பாளர் மதுவிலக்கு .கோவிந்தசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# முன்னாள் படைவீரர்களை சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்




சேலம், ஜூன் 27

சேலம் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் நேற்று நடைபெற்ற முன்னாள் படை வீரர்கள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உதவித்தொகை, பட்டா மாறுதல், நிலம் தொடர்பான கோரிக்கைகள், குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 25 மனுக்கள் பெறப்பட்டன. அதேபோன்று முன்னாள் படை வீரர்கள் நலத்துறையின் சார்பில் ஒரு முன்னாள் படை வீரருக்கு போரில் காயமுற்றோருக்கான கருணைத் தொகையாக ரூ 50,000/=, மூன்று முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ 81,000/= , ஒரு முன்னாள் படை வீரருக்கு திருமண நிதி உதவியாக ரூ 25,000/= என மொத்தம் ரூ1, 56,000/= மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# 2,500 முகவர்கள் பங்குபெற்ற ஸ்டார் ஹெல்த் முகவர்கள் திருவிழா 2026




சென்னை, ஜூன் 27,

இந்தியாவின் முன்னணி மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் நிறுவனம் , தனது 20 ஆண்டு கால சேவை, நம்பிக்கை மற்றும் வளர்ச்சிப் பயணத்தை கொண்டாடும் வகையில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் “ஸ்டார் முகவர்கள் திருவிழா 2026" என்ற நிகழ்ச்சியை நடத்தியது.

ஸ்டார் ஹெல்த் சென்னை மண்டலம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, தமிழ்நாடு வணிகத்தலைவர் பாலாஜிபாபு தலைமையில், சென்னை மண்டலத் தலைவர்கள் சையத் இம்ரான் மற்றும் அருளேசன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் சிறப்பாக நடைபெற்றது. இதில் 2,500க்கும் மேற்பட்ட ஸ்டார் முகவர்கள், 500க்கும் மேற்பட்ட ஸ்டார் விற்பனைப் பிரிதிநிதிகள், பகுதி மேலாளர்கள், விற்பனை மேலாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் பயிற்சி & மேம்பாட்டு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆனந்த் ராய் கலந்து கொண்டுமுகவர்களுடன் உரையாற்றினார். மேலும், தலைமை நிதி அதிகாரி, நிலேஷ் காம்ப்ளி , தலைமை மனிதவள அதிகாரி ஸ்ரீராம் ரகுநந்தன் உள்ளிட்ட தலைமை நிர்வாகிகள், தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகம் மற்றும் காப்பீட்டு கோரிக்கை அலுவலகங்களின் தலைமைத்துவக் குழுவினர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மேலும், முகவர்களுக்கான வளர்ச்சி வாய்ப்புகள், ஸ்டார் ஹெல்த் நெட்வொர்க் மருத்துவமனைகள், பிரதான மருத்துவமனை சேவைகள், வீடு தேடி மருத்துவம், காப்பீட்டு கோரிக்கை உதவி, சென்னை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் தேவைக் காலங்களில் குடும்பங்களுக்கு முகவர்கள் வழங்கிய ஆதரவு ஆகியவை அனுபவக் கண்காட்சி அரங்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. நிகழ்ச்சியில் உரையாற்றிய ஸ்டார் ஹெல்த் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆனந்த் ராய் "கடந்த 20 ஆண்டுகளாக ஸ்டார் ஹெல்த் வளர்ச்சிப் பயணத்தில் முகவர்கள் வழங்கிய அர்ப்பணிப்பு, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு மிக முக்கியமானது. இன்று ஸ்டார் ஹெல்த் நிறுவனத்துக்கு 8.5 லட்சத்திற்கும் மேற்பட்ட முகவர்கள், 15,000 க்கும் மேற்பட்ட மருத்துவமனை வலையமைப்பு, 2.8 கோடிக்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட மக்கள் மற்றும் தொடக்கம் முதல் 769,800 கோடிக்கும் மேற்பட்ட காப்பீட்டு கோரிக்கைத் தொகை வழங்கப்பட்ட வலுவான அடித்தளம் உள்ளது. இந்த வெற்றிப் பயணத்தில் முகவர்களின் பங்கு என்றும் முக்கியமானதாக இருக்கும்," என்று தெரிவித்தார்.

தமிழ் பாரம்பரிய கலாச்சார நிகழ்ச்சிகள், ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் 20 ஆண்டு கால பயணத்தை எடுத்துக்காட்டும் சிறப்பு காணொளி, சேவை மற்றும் நம்பிக்கையை பதிவு செய்த நிகழ்ச்சி பகுதிகள் பங்கேற்பாளர்களிடையே சிறப்பான வரவேற்பைப் பெற்றன. நிகழ்ச்சியில் உரையாற்றிய ஸ்டார் ஹெல்த் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆனந்த் ராய் "கடந்த 20 ஆண்டுகளாக ஸ்டார் ஹெல்த் வளர்ச்சிப் பயணத்தில் முகவர்கள் வழங்கிய அர்ப்பணிப்பு, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு மிக முக்கியமானது.

ஸ்டார் ஹெல்த் நிறுவனத்துக்கு 8.5 லட்சத்திற்கும் மேற்பட்ட முகவர்கள், 15,000 க்கும் மேற்பட்ட மருத்துவமனை வலையமைப்பு, 2.8 கோடிக்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட மக்கள் மற்றும் தொடக்கம் முதல் 769,800 கோடிக்கும் மேற்பட்ட காப்பீட்டு கோரிக்கைத் தொகை வழங்கப்பட்ட வலுவான அடித்தளம் உள்ளது. இந்த வெற்றிப் பயணத்தில் முகவர்களின் பங்கு என்றும் முக்கியமா னதாக இருக்கும்," என்று தெரிவித்தார்.

# உலக போதைப்பொருள் தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஓட்டம் மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சி



தேனி, ஜூன் 27

தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இன்று (26.06.2026) உலக போதைப் பொருள் தடுப்பு தினத்தை முன்னிட்டு "Start Run, Stop Drug – Anti Drug Run 2026" என்ற விழிப்புணர்வு ஓட்டம் மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், தலைமை தாங்கி, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி, கல்வி, விளையாட்டு மற்றும் நல்லொழுக்கப் பாதையில் பயணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராஜகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள், பல்வேறு துறை அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், தன்னார்வ அமைப்பினர் என ஏராளமானோர் கலந்து கொண்டு, "போதைப்பொருள் இல்லாத தமிழகம் – போதைப்பொருள் இல்லாதஇந்தியா" என்றஇலக்கைமுன்னிறுத்தி விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழிப்புணர்வு ஓட்டத்தில் அனைவரும் உற்சாகமாக பங்கேற்று,

போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராகபொதுமக்களிடையேவிழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூகத்திற்கு வலுவான செய்தியை எடுத்துச் சென்றனர். இந்த நிகழ்ச்சி மூலம் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதி வலியுறுத்தப்பட்டது.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் .ச.கீர்த்தனா தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார், நாடாளுமன்ற உறுப்பினர் .கே.கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் .பா.பாலகிருஷ்ணாரெட்டி.ஓசூர், .டி.ராமச்சந்திரன்.தளி, .பா.முகுந்தன் கிருஷ்ணகிரி, .ந.இளையராஜா ஊத்தங்கரை, .பி.எஸ்.சீனிவாசன் வேப்பனஹள்ளி ஆகியோர் முன்னிலையில், நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.சி. அனிதா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.

# கிருஷ்ணகிரியை அடுத்த குந்தாரப்பள்ளி கூட்ரோடு அருகே வி தி லீடர்ஸ் இயக்கத்தின் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம்



கிருஷ்ண்கிரி, ஜூன் 27

பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை அவர்களின் கரத்தை வலுப்படுத்தும் நோக்கில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.ரசிம்மன் தலைமையில் மோதிலால்தேசிங், ஜவகர் காந்தி, ஜித்தேஷ், ஆகியோர் முன்னிலையில், கிருஷ்ணகிரியை அடுத்த குந்தார ப் பள்ளி கூட்ரோடு அருகே வி தி லீடர்ஸ் சார்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வெள்ளிக்கிழமை ஆன இன்று 100 கிராம மக்கள் கூடும் முக்கிய சந்தை நாளில், காலை முதல் மாலை வரை இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. சுமார் 500க்கும் மேற்பட்டோர் தங்களை இந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர். இயக்கத்தில் இணைந்த அனைவருக்கும் காய்கறி விதை மற்றும் கீரை விதைகள் வழங்கப்பட்டது. மாறுவோம் மாற்றுவோம் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த உறுப்பினர் சேர்க்கை முகாமில் கிருஷ்ணகிரி சாந்தி மன்னன் சிவா ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக ராஜேந்திரன் நன்றியுரை ஆற்றினார்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# ஊரக வளர்ச்சித் துறையில் சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள்



தஞ்சாவூர் ஜூன் 27

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

அதன்படி ரூபாய் 5 கோடியே 98 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டுமான பணிகள் நடை பெற்று வருவதையும், ரூபாய் 6 கோடியே 5, லட்சத்து55 ஆயிரம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் தாசில்தார் அலுவலகம் கட்டுமான பணி நடைபெறுவதையும் கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மேலும் தஞ்சாவூர்ஊராட்சி ஒன்றியம் நாஞ்சிக்கோட்டை ஊராட்சியை ஊருக்கு ஒரு வனம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் ,ரூபாய் 18 லட்சத்து 32 ஆயிரம் மதிப்பீட்டில் நாஞ்சிக் கோட்டை ஊராட்சியில் விக்டோரி யா நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள சாலையின் தரம் குறித்து நேரில் பார்வையிட்டு கலெக்டர் ஆய்வு செய்தார் ராமநாதபுரம் ஊராட்சி மானோ ஜிப்பட்டி அரசு ஆதிதிராவிட நல உயர்நி லைப் பள்ளியில் மாணவர் களுக்கு வழங் கப்படும் உணவு, வகுப்பறை கட்டிடம், மாணவர்க ளின் கல்வித் திறன் குறித்தும், செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக கட்டி டத்தின் தன்மை குறித்தும் மனோஜிப் பட்டி நியாய விலை கடையில் பொருள் களின் இருப்பு, தரம், எடை யின் அளவு குறித்தும் மணக்கரம்பை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கோப்பு கள் பதிவேடுகளை கலெக்டர் ஆய்வு செய் தார்

பின்னர் மணக்கரம்பை அரசு ஊராட்சி யில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட் டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடு களை யும், சத்திர நிர்வாகம் சார்பில் திருவையாறு அரசர் கல்லூரியின் புனர மைப்பு கட்டுமான பணிகளை யும், திரு வையாறு தாலுக்கா வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தையும் கலெக்டர் பார்வையிட்டார். இந்த பணிகள் விரைவா கவும், தரமாக வும் முடித்திட சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தர விட்டார்

ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகணேஷ் ,தாசில் தார்கள்சிவகுமார்(தஞ்சாவூர்)முருககுமார் (திருவையாறு)சக்திவேல் (சத்திரம் நிர்வா கம்) வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்கு மார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## சென்னை ஆயுதப்படை காவலர் சாலை விபத்தில் உயிரிழப்பு:

# சொந்த ஊரில் 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் உடல் அடக்கம்



கிருஷ்ணகிரி, ஜூன் 27

நாகரசம்பட்டி காவல் சரகம் செல்லம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சென்னை மாநகர ஆயு தப்படை இரண்டாம் நிலை காவலர் அருண்குமார் (28), சாலை விபத்தில் படுகாயம டைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடல் இன்று மாலை 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதையு டன் நல்லடக்கம் செய்யப் பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம் பள்ளிதாலுகா,செல்லம்பட்டிகிராமத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணி செந்தாமரை தம்ப தியர். இவர்களது மகன் அருண்குமார்(28, PC 52336). இவர் சென்னை மாநகர ஆயு தப்படையில் (1st Platoon) இரண்டாம் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்தார். 2018ஆம் ஆண்டு காவல் துறையில் பணி யில் சேர்ந்த இவருக்கு இன்னும் திருமண மாகவில்லை.

இந்நிலையில், கடந்த ஜூன் 21ஆம் தேதி ராணிப்பேட்டையில் நடைபெற்ற தனது நண்பரின் திருமண விழாவில் அருண்குமார் கலந்துகொண்டார். திரும ணம் முடிந்து நண்பர்களுடன் மீண்டும் சென்னைக்கு காரில் திரும்பிகொ ண்டி ருந்தபோது, எதிர்பாராதவிதமாக சாலை விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் பலத்த காயம டைந்த காவலர் அருண்குமார், உட னடியாக சென்னை போரூர் ராமச்சந் திரா மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட் டார்.அங்குஅவருக்குதீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், ஜூன்.24.அதிகாலை 1.30 மணியள வில் சிகிச்சை பலனின்றி அவர் பரி தாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து சென்னை போரூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, காலை 10.30 மணியளவில் போரூர் ராமச்சந்திரா மருத் துவமனையில் பிரேத பரிசோதனை முடிக் கப்பட்டு, அருண்குமாரின் உடல் அவரது சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது.

நாகரசம்பட்டி காவல் சரகத்திற்குட் பட்ட மருதேரி கிராமத்தில் உள்ள மயானத் தில், காவலர் அருண்குமாரின் உடலுக்கு காவல் துறை உயர் அதிகாரிகள், சக காவ லர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டு கண் ணீர் அஞ்சலி செலுத்தினர். பின்னர், காவல் துறை விதிமுறைகளின்படி 21 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் அவ ரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இளம் காவலரின் இந்த மறைவு அவரது குடும்பத்தினரிடையேயும், கிராம மக்களி டையேயும் பெரும் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

## பள்ளி மாணவியை பலாத்காரம்

# வாலிபருக்கு 33 ஆண்டுகள் சிறை கோர்ட் உத்தரவு

நாகர்கோவில், ஜூன்.27

புதுக்கடை அருகே இனயம் மீனவ கிராமத்தை சேர்ந்தவர் சாருல் ஹமீது (33). அந்த பகுதியில் கூலி வேலை செய்து வந்துள்ளார். இந்த நிலையில் அதே பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி கடந்த 2020 ஆம் ஆண்டு இனயம் பகுதியில் சிறுமியின் வீட்டிற்கு ஆளில்லாத நேரம் அத்துமீறி நுழைந்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதுகுறித்து சிறுமி குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகாரளித்தார். புகாரின் அடிப்படையில் குளச்சல் மகளிர் காவல் நிலைய போலீசார் சாருல் ஹமீது மீது போக்சோ உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து சாருல்ஹமீதை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் 5 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சுந்தரையா சாருல் ஹமீதை குற்றவாளி என தீர்ப்பளித்து 32 வருடம் சிறை தண்டனையும் 14 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். மேலும் தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும் என வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஈரோடு கோட்டை பெருமாள் கோவிலில் சுதர்சன வேள்வி



ஈரோடு ஜூன் 27

ஈரோடு கோட்டை பெரு மாள் கோவிலில் சக்கரத்தாழ் வார் ஜெயந்தி விழா கடந்த மூன்று நாட்களாக நடந்தது. இந்த சுதர்சன வேள்வி அனை வரும் சுபிட்சமாக வாழவும், மழை பொழிந்து மக்கள் சந் தோஷமாக வாழவும், வழக்கு களில்வெற்றி பெறவும், நீண்ட ஆயுள் கிடைக்கவும் ,நோய் விலகவும், எதிரிகளின் சூழ்ச்சி சதித்திட் டம் போன்றவைகளில் இருந்து காக்கவும் வறுமை நீங்கவும் பயன்படும் என்ற நம் பிக்கை உள்ளது. இதில் அமைச்சர் விஜய் பாலாஜியின் மனைவியும் த மா கா மண் டல ஒருங்கிணைப்பு குழு உறுப்பினரு மான தன்யா, பிரபல ஜோதிடர் ஓம்.உலக நாதன் ,அரி பாபு மற்றும் ஏராளமான பக்தர் கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை செயல் அலுவ லர் சுரேந்தர், அறங்காவலர் குழு தலைவர் கர்சிப் சுப்பிரமணியம், அறங்காவலர்கள் சுந்தரராஜ், ராணி, ஹரிஹரன், ராவணன் மற்றும் பட்டாச்சாரியர்கள் செய்து இருந்த னர்.

# சிந்தலக்கரை வெட்காளியம்மனுக்கு ஆனி மாத மகா வேள்வி பூஜை

## 108 லிட்டர் பாலாபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜை



எட்டயபுரம் ஜூன் 27.


தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளி யம்மன்காளிபராசக்தி பீடத்தில் ஆனி மாத வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா மகாயாகம் நடைபெற்றது.வேள்வி விழா மகாயாக சாலையில் நம் அன்றாட வாழ்க் கையில் பயன்படுத்தப்ப டும் பழ வகை கள்,உணவு தானியங்கள், உடைகள்,கு ழந்தை தொட்டில், கல்உரல், அம்மி,மாங் கல்யம்,உணவு ஆகியவற்றை நடைபெற்ற மகாயாக சாலையில் செலுத்தி வழிபாடு நடைபெற்றது.அதனைத் தொடர்ந்து 42 அடி உயரம் கொண்ட வெட்காளியம்ம னுக்கு 108 லிட்டர்பாலாபிஷேகம் மற்றும் 18 கிலோ எலுமிச்சம் மாலை அணிவித்து சிறப்பு பூஜை மற்றும் தீபாராதனை நடை பெற்றது. ஆனி மாத இருமுடி விழாவிற்கு வருட வருடம் பக்தர்கள் கூட்டம் அதிக மாக வருவதால், 3வது கட்டமாக கோவை ,திருப்பூர், ஈரோடு,நீலகிரி,திருவண்ணா மலை,கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதிக ளில் இருந்து சுமார் 1000 க்கும் மேற்பட்ட விரதம் இருந்து காப்பு கட்டி இருமுடி கட்டி வந்த பக்தர்கள் பம்பை வாத்தியத்துடன் தங்களின் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

# அதிமுகவில் புதிய மாவட்ட செயலாளர்கள் நியமனம்



திருப்பூர், ஜூன். 27:

அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அமைப்பு ரீதியாக பல்வேறு மாவட்டங்களை பிரித்து புதி யதாக மாவட்ட செயலாளர் களை நியமித்துள்ளார். அதன் படி திருப்பூர் மாவட்டத்தி ற்கும் புதிய மாவட்ட செய லாளர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர். திருப்பூர் வடக்கு மற் றும் தெற்கு தொகுதிக்கு திருப்பூர் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளராக திருப்பூர் மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் வார்டு உறுப்பினர் வேல் குமார் சுவாமிநாதன், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளராக காங்கே யம், தாராபுரம், மடத்துக்குளம் ஆகிய தொகுதிகளுக்கு மூலனூர் வடக்கு ஒன்றியத்தை சேர்ந்த செல்வகுமார், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளராக பல்ல டம், உடுமலை ஆகிய தொகுதிகளுக்கு அமைப்புச் செய லாளர்சிவசாமிஎம்பி ஆகியோர்நியமிக்கப்பட்டுள்ளனர்.



சென்னை, புளியந்தோப்பு குட்டி தம்பிரான் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது, சாமி அலங்காரம் திபாரதனை நடைபெற்று,சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் ஆலய விழா குழுவினர் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது,

## முதுகுளத்தூரில் ஜமாபந்தி நிறைவு விழா

# ரூ.42 லட்சம் மதிப்புள்ள இலவச வீட்டு மனை உதவி ஆணையர் கங்காதேவி வழங்கினார்



முதுகுளத்தூர் ஜூன் 27

முதுகுளத்தூர் தாலுகா அலுவலகத்தில் கு ஜமாபந்தி நிறைவு விழாவில் 40.20 லட்சம் த மதிப்பீட்டில் இல வசமாக 42 வீட்டு மனைகள் 5 பொதுமக்களுக்கு வழங் கப்பட்டனமுதுகுளத்தூர் தாலுகா அலுவலகத்தில் மாவட்ட துணை ஆணையர் (ஆயம்) கங்கா தேவி தலை மையில் ஜமாபந்தி நடைபெற்றது.. முதுகு ளத்தூர் தாசில்தார் முன்னிலையில் கிராம நிர்வாக அலுவலர்கள் வருவாய் கணக்கு களை சமர்பித்தனர்.கிராம கணக்குகளை ஆய்வுசெய்த மாவ ட்ட துணை ஆணையர் (ஆயம்) 31பட்டாமாறுதல்களுக்கு உத்தர விட்டார்.ஜமா பந்தியில் நலிந்தோர் உதவி திட்ட தாசில்தார் மரகத மேரி மண்டல துணை தாசில்தார்கள் ராமர் தமிழ்மதி தலைமை இடத்து தாசில்தார் விஜயா வரு வாய் ஆய்வாளர் தினேஷ் சர்வேயர் ஸ்டீபன் கிராம நிர்வாக அலுவலர் சங்க நிர்வாகிகள் பாலகிருஷ்ணன் மாவட்ட பொருளாளர், மணிமூர்த்தி அன்புக்கண் ணன் தனவேந்தன் உள்பட கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண் டனர்.

## கிருஷ்ணகிரியில்

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



கிருஷ்ணகிரி ஜூன் 27:

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் இருந்து துவங்கிய விழிப்புணர்வு பேரணி யானது, லண்டன் பேட்டை, பெங்களூர் ரோடு, காந்தி ரோடு . ராயக்கோட்டை ரோடு உள்ளிட்ட பல்வேறு முக் கிய சாலை வழியாக 2000க்கும் மேற்பட்ட பள்ளி, மற்றும் கல் லூரி மாணவ, மாணவிகள் கள்ளச்சாராயம் மற்றும் போதை பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும், போதைப் பொருட்க ளுக்கு அடிமையானவர்கள் உடல் நலம் பாதிக்கப்படுவது மட்டுமின்றி மன நல மும் பாதிக்கப்படும்.அவர்களைசார்ந்த குடும்பத்தினர்களும்.சமுதாயமும் பாதிக் கப்படுவதாகவும், இதனை வெளிப்படுத் தும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் கைககளில் போதைப் பெருள் தடுப்பு வாசகங்கள் அடங்கிய பதா கைகளை கைகளில் ஏந்தியபடி மற்றும் துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் கொடுத்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணியின் போது மாவட்ட காவல் கண் காணிப்பாளர் அனிதா, கலால் உதவி ஆணையாளர் பழனி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் செந்தில்குமார், துணை காவல் கண்காணிப்பாளர் ராமச்சந் திரன், கோட்ட ஆய அலுவலர் பிரதாப், ஓசூர் கோட்ட அலுவலர் கோவிந்தராஜ், குழந்தை நல பாதுகாப்பு அலுவலர் ராஜ வேல், மாவட்ட தொடர்பு அலுவலர் கண் ணியப்பன், என்.சி.சி அலுவலர் சக்கரதே வன், மற்றும் கிரிதரன், சுதாகர், மதுவிலக்கு துணை காவல் கண்காணிப்பாளர் கோவிந் தசாமி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந் துக் கொண்டனர்.

## மண்டைக்காடு அருகே

# குடும்ப பிரச்சனை மீனவர் தூக்கிட்டு தற்கொலை

குளச்சல், ஜூன். 27

மண்டைக்காடு அருகே புதூர் பிஆர்எஸ் நகரை சேர்ந்தவர் சகாய எல்டின் (40). மீன்பிடி தொழில் செய்து வந்தார். இவரது மனைவி அனுஜா (36). இவர் மீனவர் கூட்டுறவு சொசைட்டியில் எழுத்தராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் தம்பதிக்கு இடையே பிரச்சனை ஏற் பட்டு உள்ளது. இதைத்தொ டர்ந்து 2 குழந்தைகளை அழைத்துக்கொண்டு அனுஜா அவரது தாய் வீட் டிற்கு சென்று விட்டார். இத னால் மன உளைச்சலில் இருந்து வந்த சகாய எல்டின் வீட்டின் ஹாலில் உள்ள மின்விசிறியில் அவரது வேட்டியால்தூக்குபோட்டு தூக்கில் தொங்கிய நிலை யில் காணப்பட்டார். பின் னர்சகாய எல்டின்வெளியே வராதால் சந்தேகம் அடைந்த அக்கம்பக்கத்தி னர் கதவை தட்டி உள்ளனர். கதவு திறக்காமல் ஜன்னல் வழியாக பார்த்தபோது சகாய எல்டின் தூக்கில் சட லமாக தொங்கியதை பார்த்து, அவரது மனைவி அனுஜாவுக்கு தகவல் தெரி வித்தனர். அனுஜா அளித்த புகாரின் பேரில் மண்டைக் காடு போலீசார் சம்பவ இடத்தில் வந்து சகாய எல் டனின் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி



திருப்பூர் ஜூன்:27

மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர்மாநகராட்சி, சிக்கண்ணா அரசு கலை கல்லூரி வளாகத்தில் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அலுவலர்கள் மற்றும் கல் லூரி மாணவர்கள்போதைப் பொருள்பழக் கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் தெற்கு) எஸ். பாலமுருகன், (திருப்பூர் வடக்கு) வி.சத்ய பாமா, (பல்லடம்) ராம்குமார், மாவட்ட வருவாய் அலுவலர்க.கார்த்திகேயன், மாந கர போக்குவரத்து காவல் துணை ஆணை யாளர் இராஜராஜன் மாவட்ட விளை யாட்டு அலுவலர் ரகுகுமார் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானம் நீச்சல்குளம் முகப்பு பகுதியிலிருந்து, சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு " போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம் 2026" போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ராஜகோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகக்கூறி

# பணத்தை மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: பாதிக்கப்பட்டோர் புகார்



திருப்பூர், ஜூன். 27:

திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், வெள்ளியங்காடு பகுதியை சோ்ந்த பொதுமக்கள் ஒரு மனு கொடுத்தனா். அந்த மனுவில் அவா்கள் கூறியிருப்பதாவது : எங்களது பகுதியை சோ்ந்த ஜெயசுகன்யா மகளிர் சுய உதவிக்குழு மூலமாக அறிமுகமானார். அவா் திருப்பூரில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருவதாகவும், அதில் முதலீடு செய்தால் மாதம் மாதம் பணம் கிடைக்கும் என்றார். இதனைநம்பி நாங்கள் கொஞ்சம், கொஞ்சமாக நாங்கள் பலரும் லட்சக்கணக்கில் பணம் கொடுத்தோம். நகைகளை விற்றும் பணம் கொடுத்தோம். ஒட்டுமொத்தமாக பலரிடம் ரூ.5.5 கோடி வரை பணத்தை பெற்றதாக தெரிகிறது. இதன் பின்னா் அவரை தொடா்புகொள்ள முடியவில்லை. அப்போது தான் நாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்தோம். இது குறித்து தெற்கு போலீசில் புகார் கொடுத்தோம். முறையான விசாரணை நடத்தப்படவில்லை. எனவே எங்களது பணத்தை பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜெயசுகன்யா மற்றும் மோசடியில் ஈடுபட்டவா்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியிருந்தனா்.


மோட்டார் விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம், திண்டுக்கல்
M.C.O.P. No. 610 of 2025
அஜித் கான் ... மனுதாரர்
எதிர்
T. பிரபு மற்றும் பிறர் ... எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
T. பிரபு, த/பெ. திருமூர்த்தி, No.2/20, செட்டியார் தெரு, ஆலமரத்துப்பட்டி, பஞ்சம்பட்டி, திண்டுக்கல் - 624303. மேற்கண்ட M.C.O.P. No.610/2025 வழக்கு திண்டுக்கல் மோட்டார் விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ளது. தங்களுக்கு வழக்கமான முறையில் சம்மன் சார்பு செய்ய இயலாத காரணத்தால், மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவின்படி இவ்வறிவிப்பு வெளியிடப்படுகிறது. எனவே, தாங்கள் 29.06.2026 அன்று நடைபெறும் விசாரணையில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் தங்களுக்கு எதிராக ஒருதலைப் பட்சமாக (Ex Parte) வழக்கு விசாரிக்கப்பட்டு உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்.
இடம் : திண்டுக்கல்
மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்


DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.